**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**

**அசல் வழக்கு எண்**.60/2021

**2026 ஆம்** வருடம் ஆகஸ்ட் மாதம் 05 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1–இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேஷ் பிரபு | ஜாதி | : | |
| த.பெ | : | பாலகிருஷ்ணன் | தொழில் | : | ஓய்வு பெற்ற ராணுவ வீரர் |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 45/2026 |
| தேதி | : | 05.08.2026 | | | |

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் திரு. வெங்கடேஷ் ஆகிய நீங்கள் அளித்த தகவலின் பேரில் தான் இந்த ஆவணம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 1006/975 என்ற எண்ணிற்கு தான் பி.வா.சா.ஆ.3 பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிராதில் வட்டாச்சியர் ஆத்தூர், வருவாய் கோட்டாச்சியர் திண்டுக்கல், மாவட்ட வருவாய் அலுவலர் திண்டுக்கல், மாவட்ட ஆட்சித் தலைவர் திண்டுக்கல் ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.61/2021 என்ற எண்ணில் நடந்து முடிந்துவிட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதிகளான வட்டாச்சியர் ஆத்தூர், வருவாய் கோட்டாச்சியர் திண்டுக்கல், மாவட்ட வருவாய் அலுவலர் திண்டுக்கல், மாவட்ட ஆட்சித் தலைவர் திண்டுக்கல் ஆகியோர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

அந்த பரிகாரத்தை எதிர்த்து எந்த மேல்முறையீடும் அந்த வழக்கின் பிரதிவாதிகள் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.61/2021 வழக்கு தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்பு தான் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் மீது நடவடிக்கை எடுக்க கோரி நீங்கள் மனு கொடுத்தீர்கள் என்றால் சரிதான். சர்வே எண்.1006/975 என்ற இடத்தில் உள்ள மரத்தை தான் மேற்சொன்ன வழக்கில் பெற்ற தீர்ப்புக்கு பிறகு இவ்வழக்கின் வாதிகள் வெட்டினார்கள் என்றால் சரிதான். தீர்ப்புக்கு பிறகு மரத்தை வெட்டியது தவறில்லை என்றும், நீங்கள் அடிக்கடி மனு செய்து அரசு அதிகாரிகளை அலைக்கழிப்பு செய்ததால் உங்களுடைய தூண்டுதலின் பேரில் தான் பி.வா.சா.ஆ–2 ஆவணம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.61/2021 ல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட பிறகு பி.வா.சா.ஆ.2 ஆவணம் அளித்துள்ளது சட்டத்துக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor